# மவுண்ட் அபு என்ற அபுமலை வந்த கதை

## சாந்திப்பிரியா

*(அபிராமி* , ஜூலை, 2008 இதழில் வெளியான
இந்த கதையின் மறு பதிப்பு இது )



பிரும்மாவிடம் காமதேனுவை தனக்கு
தரும்படி இந்திரன் கேட்டார்

ஒவ்ஒரு சம்பவத்திற்கும் ஒரு புராணக் கதை உண்டு. புதுடெல்லி, அஹமதாபாத், ஜோத்பூர் மற்றும் ஆக்கிராவில் இருந்து நேரடியாக செல்ல முடிந்த இராஜஸ்தானின் அபு மலை இன்று உள்ள இடத்தில் எப்படி வந்தது? இதோ இரண்டு கிராமியக் கதைகள்.

பிரும்மாவிடம் பல பசுக்கள் இருந்தன. அவை மிகவும் அழகானவை. அதில் ஒரு பசு தேவலோகத்தில் வந்த எவருக்கும் குறைவின்றி பால் தந்து வந்தது. அது மிகவும் தெய்வாம்சம் பொருந்தியது என்றும் , காமதேனுப் பசுவிற்கு இணையானது என்றும் அதனால்தான் அது உள்ள இடத்தில் எந்த தீமையும் நுழைய முடியாமல் இருக்கின்றது என பிரும்மா கர்வமாக இருந்தார். அதைக் கேள்விப்பட்ட தேவலோக அதிபதியான இந்திரனுக்குப் பொறாமை ஏற்பட்டது. அதை அடைய எண்ணியவன் பிரும்மாவிடம் சென்று அந்தப் பசுவை தனக்குத் தர முடியுமா என்று கேட்ட பொழுது அவர் மேற் கூறிய செய்தியைக் கூறி விட்டு பசுவைத் தர மறுத்து விட்டார். ஆகவே சமயம் பார்த்திருந்த இந்திரன் ஒரு நாள் பிரும்மா வீட்டில் இல்லாத பொழுது அந்தப் பசுவை

திருடிக் கொண்டு சென்று விட்டார். திரும்பி வந்த பிரும்மா பசுவைக் காணாமல் திகைத்தார். அதை இந்திரன்தான் கொண்டு சென்றிருக்க வேண்டும் என தெரிந்தது. அதைத் தேடிப் போனார். அந்த பசுவை ஒழித்து வைத்திருந்த இமயமலை அடிவாரத்தில் பிரும்மா வருவதைக் கண்ட இந்திரன் பசு இருந்த மலைப் பகுதியை அப்படியே வெட்டி எடுத்து குஜராத் பக்கத்தில் இருந்த இடத்தில் கொண்டு போய் வைத்து விட்டார். பசுத் தலைப் போன்று வெட்டப்பட்டு கொண்டு வரப்பட்ட அந்த மலையே மவுன்ட் அபு என்ற அபு மலை. அது பசு உள்ள இடம் என்பதினால் அந்த இடம் பலரும் வந்து ஆனந்தமாக இருக்கும் இடமாக அமைந்தது.

இன்னொரு கதையின்படி வசிஷ்டர் என்ற முனிவர் அந்த மலை உள்ள இடத்தில் ஒரு யாகம் செய்தாராம். அப்பொழுது அவருடைய காமதேனு என்ற பசு கால் தவறி கீழே பாதாளத்தில் விழுந்து விட்டது. மேலே ஏறி வர முடியவில்லை. அதனால் அவர் சரஸ்வதி தேவியிடம் வேண்டிக் கொள்ள அவளும் பிரும்மாவிடம் கூறி அந்த பாதாளத்தில் பெரும் மழை பொழிய வைக்க அந்த பாதாளத்தில் நீர் நிறம்பியது. அதைக் கண்ட வஷிஷ்டர் இமய மலையிடம் சென்று இனி அந்த நீர் ஆவியாகிப் போய் விடாதவண்ணம் இருக்க அந்த பள்ளத்தில் தன்னிடம் இருந்து வழிந்தோடும் நீரினால் நிறப்பிக் கொண்டே இருக்குமாறு வேண்டினாராம். பள்ளத்தாக்கில் நீர் நிறம்பி வழிய வழிய நீரில் நீந்தியபடி காமதேனு மேலே வந்ததாம். அதற்கு இமய மலையின் புதல்வனான அர்புத் என்ற பாம்பு தன்னை ஒரு கயிறு போல மாற்றிக் கொண்டு அதைப் பிடித்தபடி மேலே வர உதவியதாம். அதனால்தான் அதன் பெயராலேயே அந்த மலைக்குப் பெயர் அர்புத் எனப்பட்டு அது மருவி அபு மலை என ஆயிற்றாம்.